உ

கடவுள் துணை.

மகாமகுத்துவம் பொருந்திய

# அகத்தியமகா முனிவர்

அருளிச்செய்த

அனுபோக மலையாள மாந்திரீக

# ஹரிச்சுவடி

## முதற்பாகம்.

இஃது.

மலையாளசுவாமிமாணுக்கரிலொருவராகிய

ம-ா-ா-ஸ்ரீ.

ம. வேலாயுத சுவாமிகளால்

எழுதிமுடிவுபெற்றதை.

சுத்தமான பதிப்பு.

மயிலை.

திருவேங்கட முதலியாரால்.

சென்னை.

ஸ்ரீ.மாதவவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

இதன்விலை ] —*— [ அணா 4

ரிஜிஸ்தர்காபிரைட்.

உ

கடவுள் துணை.

# மலையாள மாந்திரீக


# ஹரிச்சுவடி

## முதற்பாகம்.

காப்பு.

ஆனைமுக னறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுருவாணியையு ணு.

### விநாயகர் பூஜை சக்கரம்.





### ஜெபிக்கும் வகை

மேற்கண்ட சக்கரத்தை ஓர் தாம்பாளத்தில்விபூதிபிட்டு அதிலசக்கரத்தை யெழுதிவைத்துக்கொண்டு தாம்பூலம் பழம் வெல்லம் அவலகடலை இவை முதலானதும் வைத்துக் கர்ப்பூரத்தைகொளுத்திவைத்து சொல்லும்.

## மூலமந்திரம்.

ஓம்-றீம். கங்கணபதி வாவாகணபதி சுவாகா ௱அ-உருசெபிக்க சித்தியாகும் சக்கரத்தை குலிச மெழுதிகட்ட சகலதோஷமும் நீங்கும்.

## சகலதோஷத்திற்கும் மந்திரிக்க சக்கரம்.





## மந்திரிக்கும் வகை.

குழந்தைகட்கும் பெரியோர்கட்கும் மந்திரிக்க வேண்டிய வந்தவர்களைகிழக்குமுகமாக நிற்கவைத்து வேப்பிலை கொத்தால்மந்திரிக்கவெண்டும். அப்போது சொல்லவேண்டியது-ஒம்-ஆம்-உம்-பஞ்சாக்ஷரரூபீசகலதோஷமும் நீங்க - நசி - மசி-சுவா-என்று-௱அ-தரம் சொல்லி மந்திரித்து மேற்கண்ட சக்கரத்தில்அன்னோனுடையப் பெயரை அடைத்து குலிசமெழுதிக்கட்ட வேண்டும்.




## குளிதோஷத்திற்குச் சக்கரம்.




மேற்கண்டசக்கரத்தை செம்புத்தகட்டில்எழுதி தோஷம் தாங்கிய மாதின்பெயரை அந்த சக்கரத்தில் அடைத்து தூபதீப நைவேத்தியங் கொடுத்து சொல்லும் மந்திரம்-ஓம்-நங்-மங்-சிங்-வங்-யங்-சடையசடைய-சாமுண்டி சடைய-சுலாகா-என்று-௱அ-தரம்ஜெபித்து அந்ததகட்டைகுலிசத்தை தாயித்தையிலிட்டுதாலிகயற்றிலகட்டிகொள்ளசகலகுளிதோஷமும்நீங்கிகுளிசிற்கும் வெள்ளிக் கிழமைதோரும் விரத மிருக்க வேண்டும்.

## தேள்விஷம் இரக்க வசிய சக்கரம்.




மேற்கண்ட சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி பூஜையிலவைத்து சாப்பிராணி தூபங் கொடுத்து கீழ் சொல்லிய மாலை-கூஅ-தரம் நாளொன்று செபித்து ஒருமாதம் வரையிலும் தவறாமல் பூசித்து வந்துபின்பு தேள்விஷ மிரக்கச் சித்தியாகும்.

### மந்திரிக்கும்மால்.

காலாபிச்சு - கத்தர்பல் - ஹரியடோர் அம்பர்ஸ் ஹாயா உத்தர்ஜாணு உத்தர்ஜாணு ஙஉத்தியதோசெம்பார்கே குண்மே தலிங்கா உத்தர்ஜா-உத்தர்ஜாஎன் ரு-ாஅ-தரம் சொல்லி சீலையால் மந்திரிக்க விஷமெரங்கும்.



## சுளுக்கு நிவாரண வசிய சக்கரம்.





மேற்கண்ட சக்கரத்தை யெழுதி பூசையில்வைத்து தூபதீபநைவேத்தியங் கொடுத்து எட்டுநாள் காலைமாலை கீழ்சொல்லிய மூலமந்திரத்தை கூஅ-தரம் சொல்லி சபித்து பின்பு மணகட்டியினால் சுளுக்கின் மீது பிசைந்துக்கொண்டே மூலமந்திரத்தை ாஅ-தரம் சொல்லவேண்டும மூன்றுநாள் ஆறுவேளை மந்திரிக்க சுளுக்குதீரும்

### மூலமந்திரம்.

ஓம் சங்கு உருள-நசி சக்கமுருள மசி-சிக்குபிரள கசி-சுவாகா.

## முடிகயர் கட்ட வசிய சக்கரம்.





மேற்கண்ட சக்கரத்தை செப்புத்தகட்டில் யெழுதி ஒருபட்சம் வரையிலும் பூஜையில் வைத்து கீழ் சொல்லிய மால் மூலமந்திரத்தை நாள் ஒன்றுக்கு ௲அ-உருஜெபித்து வரவசியமாகும் அதன்பின் குழந்தைகட்கு எவ்விததோஷம் அணுகினும் அதற்குவெள்ளெருக்கன்நார் கொண்டுவந்து மால்மூல மந்திரத்தை-௱அ-தரம் சொல்லி ஓர் சொல்லு ஓர் முடியாகப் போட்டு ௱அ-முடியும் முடிந்தானஉடன்கயற்றைவைத்துதூபதீப நைவேத்தியங் கொடுத்து குழந்தை சட் குங்கட்ட சகலதோஷம் அணுகாது.



## மால்-மூலமந்திரம்.

ஓம்-கம்-கம்-கட்-கட்-கம்காளி ருத்திர தேவதா மகா காளி றீம்-றீம் சுவாயனம்.

## சர்வவிஷக்கடி நிவாரண சக்கரம்.





மேற்கண்ட சக்கரத்தை ஓர் தகட்டில்எழுதிதூப தீபநைவேத்தியங் கொடுத்து பூஜையில் வைத்து கீழ் சொல்லிய மூலமந்திரத்தை நாள்ஒன்றுக்குகாலைமாலை ௲அ-உருவாக முப்பதுநாள் கொடுத்துவர சித்தியாகும் பின்பு எவ்வித விஷக்கடிகளுக்கும் மந்திரிக்க விஷமிறக்கும் மூன்றுநாள் ஒன்பதுவேளை மந்திரிக்கவேண்டும்-சக்கரம் மரப்பலகையில் அடைக்கவும்.

## மூலமந்திரமால்.

ஓம்-அம்-உம்-யல-வங்-சிங்-மங்-நங் மகலோகா புருஷயநமா சகலலோக ராட்சச சம்மாரயரூபயநமா பூர்வேகல சம்மாரநமா சர்வேஜனே ராக்ஷகயநமா.

## நவக்கிரகங்கள் வசிய

## சக்கரம்.



மேற்கண்டநவக்கிரக சக்கரத்தை பஞ்சலோகத் தகட்டிலெழுதி தூபதீபநைவேத்தியங்கொடுத்துபூசையில்வைத்து முப்பதுநாள் வரைக்கும் கீழ்சொல்லிய மூலமந்திரத்தை நாளொன்றுக்கு காலை மாலை நூஅ உருசெபித்துக்கொண்டுவர சித்தியாகும் பின்பு யாவருக்கேனும் குலிசமெழுதிச்கட்டவேண்டுமால் அவர்களுடையப் பெயரை இநதசக்காத்தில் அடைத்து குலிசமாகக்கட்ட சகலதோஷமும நிவர்த்தியாகும்.




### மூலமந்திரமால.

அகம் அடங்க ஆங்கார மடங்க விசைம் ஒடுங்க லிங்கத்துள் ஒவ்வும அடங்க - சிங-மங்-வங்-மசி - நசி உம்-சுலாகா.

## சுப்பிரமண்ணியர் பூஜை

## சக்கரம.




### ஜெபஞ் … யயுமமால்.

ஓம் குரும் குரும் சிவா சிவா மண்டலாதிபதி மாணிக்ககுமரா வா வா ஸ்ரீம் ரீம் சரவணபவா சகுதியிலவருக வுன்னை சதிக்தேசன் உன்னருளாக என்னைரக்ஷிக்க உன்பதம்போற்றினேன்.

### மூலமந்திரம்.


ஓம்-றம்-றீம்-கப-சம-வப-லம் - வஜீகா - வஜிகா வேலோன்வருக ஐயும் கிலீபுய-சவ்வும் சிவாயா.

பூசைசெய்யுமவகை.

மேற்கண்டசக்கரத்தைஓர்செப்புதகட்டை எடுத்துசுத்தமசெய்து அதில்எழுகிதூபதீபநைவேத்தியங்கொடுத்துமுப்பதுநாள்வரைக்குமநாள ஒன்றுக்குமால்௲அ-ம்மூலமந்திரமா அ-மகாலேமாலே இருவேளேயும் செபித்துக கொண்டுவற சித்தியாதம பூஜை செய்யும் நாள்முப்பதும் விரதமாகபகல்ஒருவேளே அன்னமபுசிக்கவேண்டும.

## வாலேபஞ்சாட்சரி பூஜை

சக்கரம.





ஜெபம்செய்யுமமால்.

ஓம்பிரணவ பஞ்சாக்ஷரி வாலரூபீ மணிமந்திர சுரூபீ கேவிரிகெந்தரி வசிய வசிய சிவா,

மூலமந்திரம.

ஐயும் கிலியும் சவ்வும் ஸ்ரீம்-ரீம் சம-கம் லம் வங் சிவா.

மேற்கண்ட சக்கரத்தை செப்புத்தகட்டில் யெழுதி தூபதீபநைவேத்தியங்கொடுத்து மால் ௲அ-ம் மூலம்ந்திரம் ௱அ-ம சொல்லி ஜெபித்துக்கொண்டுவர சித்தியாகும் ஒருமாதம் வரையிலும் பூசைசெய்யவேண்டும் விரதமாகவிருந்து பகலிலஒருவேளே அன்னம் புசித்துவரவேண்டும.

## நோயில்லாது பிரசவிக்க பூஜை

சக்கரம.




மேற்கண்ட சக்கரத்தை யெழுதி தூபதீப நைவேத்தியங்கொண்டு கீழ்சொல்லிய மூலமந்திரத்தைக்

காலைமாலை எட்டுநாள்பூசை செய்துக்கொண்டுவர சித்தியாகும் பின்பு யாதா மொருவர்பிரசவிக்கப்பாதைப்படில் அப்போது ஒரு வெத்திலையை யெடுத்து அதில் வெளக்கெண்ணெயைத்தடவி கீழ்சொல்லிய மந்திரத்தை சாத்தி யெட்டுதரம சொல்லி கெர்ப்பபாதைப் படுவோர்களுக்கு உள்ளுக்குக்கொடுக்க பாதையில்லாமல பிரசவிப்பாரகள.

மூலமந்திரம்

ஓம்-றீம்-சங்கரி-நமசிவாயா-லோகாட்சகி கன்னிகாதேவி பந்துர சுவா-உரு-௱அ.

(சகலவிஷமிரக்க கெருட தியானம்)

ஓம் கெருடா சிவகெருடா பக்ஷிகெருடா மக்ஷி மலை நாசிகெருடா சங்குதிருக சக்கரந்திருக ஆதிமூலந்திருக அமிசஞ்சுட்டினேன் ஓடிவந்தான் கருடன் ஒசந்தகொம்பிலேறினான் உட்டது நாக பாஷம் விஷமிங்கில்லை நீ அநதிகொண்டு குதிபான் அமுர்தங்கொண்டு குதிக்குறேன்.

மூலமந்திரம்.

ஆம்-றீம கொண்டுவா குளிகை மூடிதுணி கரித்தேன் மடி துணி கொண்டுவா பிச்சைமீந்தேன் பெருந்துணி கொண்டுவா வசி-சிவ மசி-நசி சுவாமாலை தூஅ உரு-௱அ-சொல்லவேண்டியது.



சர்வவசியத்திற்கு பூஜை

சக்கரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ச | வ | ய | ந | ம |
| வ | ய | ந | ம | சி |
| ய | ந | ம | சி | வ |
| ந | ம | சி | வ | ய |
| ம | சி | வ | ய | ந |
| சி | வ | ய | ந | ம |

மேற்கண்டசக்கரத்தை செப்புத்தகட்டில் யெழுதி தூபதீபனைவேத்தியம கொடுத்து கீழ் சொல்லிய மூலமந்திரத்தை நாள் ஒன்றுக்கு காலைமாலை இருவேளையுமா ௱அ உருகொடுத்துக் கொண்டு வரவேண்டும் முப்பதுநாள் தவராமல்பூசித்துக்கொண்டுவா சித்தியாகும் பின்பு யாவருககேனும் செய்ய வேண்டுமாகில்

அவர்களுடையப் பெயரை சக்காததில அடைத்துகு லிசமாகக்கட்ட சகலமும் சித்தியாகும்.


மால்-௲அ.

ஓ! மருமலர்வாசனி சர்வஜன ரக்ஷணி கௌரி கெந்தாரி மனோவசியம் குருகுருசுலாகா.

மூலமந்திரம்-ராஅ.

ஐயும் கிலியும் சவ்வும் ஸ்ரீயும் றீயும் மந்தர சுந்தரி சிவா.


விபூதிபிடிக்கு மந்திரம்.




மேற்கண்ட சக்கரத்தை சந்தனப்பலகையில்எழுதி பூஜையில்வைத்து தூபதீபநைவேத்தியங் கொடுத்தவாமல எட்டுநாள் வரையினும் காலைமாலை இருவேளையும் கீழ்சொல்லிய மூலமந்திரத்தை ராஅ உரு கொடுத்துக்கொண்டுவர சித்தியாகும் பின்பு காத்துப்பிடித்தவர்களும் பயந்தவர்களுக்கும் விபூதிமந்திரத்துக்கொடுக்க தோஷம் நீங்கும்-மூலமந்திரம்-ஓம்-வசிவசி ருத்திரமகாலட்சி சடாதரி சங்கரி-அங்-கங்-வங் சின்ரூபி சித்திரூபி மசிரசி பூதபஞ்சாரரூபி ஸ்ரீம்-றீம் சுவாயநமா.



கணபதிபூஜை சக்கரம்.




பூஜைமால்.

ஒங்கணபதி நமசிவாயாநமோவிக்கிநேஸ்பராய-ன் பாதமே நம்பிவந்தேன் எத்தூரம போனாலும் பக்கத்தில் நின்று ரக்ஷித்தருளவேண்டும்.


மூலமந்திரம்.

ஒம்கணபதிவாவா ஐயும்கணபதிவாவா அங்-கம் கங்-கம்-எங்கும் கணபதிவாவா சர்வலோகமெல்லாம் உன்கைவசமானாற்போல் என்கைவசமாகி யிருக்கச்சுவாகா மால - ௲அ-மூலமந்திரம்-ராஅ-சொல்ல வேண்டும்..

யாதாமொருவநுக்குக் குலிசமெழுதிக்கட்ட வேண்டுமாகில் அவர்களுடையப் பெயரை சக்கரத்தில்

அடைத்து தூபதீபநைவேத்தியங்கொடுத்துப் பூஜை செய்துகட்ட பேய்பிசாசு முதலாகிய சர்வதோஷங்களும் நிவாரணமாகும் பெதிரிகள் செய்யும் படியான வைப்புயேவல் முதலானதும் வந்தணுகாது ஆனலகுலிசத்தை சுத்தமாகக்கட்டிககொண்டிருக்கவேண்டும்.

## வயிரவர்பூஜை சக்கரம்.




## பூஜைமால்.


ஓம் வயிரவா ஓங்காரவயிரவா சத்திவயிரவா சங்காரவயிரவா சர்வபூதபேத பிசாசுகளும் சங்காரமாக செய்வாய் ௱அ-தரம் சொல்கவேண்டும்.

## மூலமந்திரம்.

ஓம்-றீங்-குரோம-சிங்வங் - ஜடாயா ஜடாயா மகோர்தங் ஜடாயாசுவாகா உருவு-௲அ-கொடுக்கவும்.




## மோகினிவசிய சக்கரம்.




## மால் மூலமந்திரம்.

அரி ஓம் அரகரமோகினி ஆதிமோகினி-சவ்வும் கிலீயும்-கிட்னே மோகினிமவ்வும்-ஐயும் - அணைத்திடு மோகினி வாவா-றீம்-வவ்வும் வாலே மோகினி வந்தருள் செய்வாய் உன்பாதம்போற்றினேன் உன்னருள் செய்ய வருக சிவா-உருவு-௲அ-செபிக்கவும்.


## அஷ்டலட்சுமி வஜிகரபூஜை சக்கரம்.




ஓம் மகாலட்சுமிராவே மாகாளிலட்சுமிராவே தீனலட்சுமிராவே சர்வபூரணி பஞ்சாட்சரி லோகரட்சகிசர்வசம்பத்து ரட்சகி நீபாதார விந்தமு சரணம்பஞ்சாட்சாரூபீ வஜியம் வஜியம் சிவா ஸ்ரீயும் ரீயும் வங்சுவாகா மேற்கண்டசக்கரத்தை வெள்ளித் தகட்டில் யெழுதி பூசைசெய்துவரவும்-உருவு கூஅ.




## அனுமார்பூஜை சக்கரம்.




### மூலமந்திரம்.

ஓம்-குடு-குடு பாக்ஷா குங்காதேவி சவரபாக்ஷா சல்தேவீர் அனுமநது சயித்தானிகி மார்மார் நசி மசியா சக்கரத்தை வெள்ளிதகட்டிலெழுதி பூஜை செய்ய சித்தியாகும் தூபதீபனைவேத்தியம்-உருவு-கூஅ.

## பேயை கட்டு மந்திர யெந்திரம்.





### மூலமந்திர மால்

ஓம்-அம்-அம்-சிவா சிவா ஸ்தப்பே ஸ்தம்பே சர்வ பூதபேத பசாசுகளும் சர்வதேவர்களும் நானினைத்தபேர்களும் ஓம் ஸம்பாயா கிரீம் ஸம்பாயா ஐயும்

ஸம்பாயா ஓம் றீம் பட்டுசுவாகா - சக்கரத்தை எழுதி தூபதீப நைவேத்தியங் கொடுத்து யெட்டுநாள் பூசைசெய்துகொண்டுவர சித்தியாகும் உருவு ௲௮.

## உச்சிபட்டால் மந்திரிக்க சக்கரம்.





மேற்கண்டசக்கரத்தை செம்புதகட்டில்யெழுதி பூஜையில் வைத்து தூபதீபநைவேத்தியத்துடன் கீழ் சொல்லியமால மூலமந்திரத்தையும் காலைமாலை எட்டு நாள் செபித்துக்கொண்டுவர சித்தியாகும் உரு-௲௮ பின்பு குழந்தைகள் உச்சிமார்பில்பட்டால் இந்தமால்மூலமந்திரத்தை நூத்திஎட்டுதரம் சொல்லிப்பால்மந்திரித்து கணத்தில் பொடடுவிட சுகமாகும் மூன்று நாள் மந்திரிக்கவேண்டும்.

## மால் மூலமந்திரம்.

ஓம் இந்திரன் மகளாருக்கு இளமாரு இளங்குருத்து நோகுதென்று செப்புக்குடங்கொண்டு பாலாைத்தண்ணீர்க்குப் போகையிலே காலால் உதைக்கருகயால் வருக சுவாகா-மூலமந்திரப்-நசி-மசி-கசி-இரங்கிப்போசுவாகா மால்-௲௮-மூலமந்திரம்-௱௮-சொல்க.



## உடல்கட்டு மந்திரம் அதற்கு சக்கரம்.





## மூலமந்திரமால்.

ஓம்-ஐயும் சிரசை கணநாதன் காக்க மவ்வும் முகத்தல மகாலட்சுமிகாக்க சவ்வும் கழுத்தில்காளிகாதேவிகாக்க ஐயும் மாரில் மசான்ருத்திரி காக்கலியும் பின்புரம வயிரவர்காக்க கிரியும் தொப்பையை கணபதிகாக்க இட துகரம்வலதுகரம்இரண்டையும் வாலைபரமேஸ்பரிகாக்க, ஐயும,றீம்இடைதுடை இரண்டும் மகாலட்சுமிகாக்க யவ்வும் சவ்வும் முழங்கால் இரண்டும முனீஸ்பரன்காக்க பாதமிரண்டும் பூமாதேவிகாக்க வங்சிங சுவாகா,

மேற்கண்டசக்கரத்தை வெள்ளிதகட்டில்யெழுதி தூபதீப நைவேத்தியங்கொடுத்து மூலமந்திரமாலை நூத்திஎட்டுதரம் சொலலவேண்டும்,

## காட்டேறிவசிய சக்கரம்.



### செபஞ்செய்யுமால்


ஓம்ஃவீரிஷாக்ஷி வீரகபாலி சந்திர சந்திராயுதி நமிஷகரன்விந்தை பணிகிஃபோது தந்தரிமகதரி மகா காட்டேறி வசிப வசிய சிவாய சிவாய சுவாகா ஜெபம்-௲அ,

### மூலமந்திரம்.

ஓம்-சவ்வும்-கிலியும்-ஐயும்-சவ்வும் - கிலியும்-நசி மசி சுவாகா-உருள-௱அ - தூபதீபநைவேத்தியத்துடன் எட்டுநாள் பூசிக்க சித்தியாகும்,



## வாணிப முதலாகிய காரியங்கள் வசிய பூஜை சக்கரம்.



### மூலமந்திரம்-மால்.


ஓம்-றீம்-ரம் யனமசிவா சர்வஜனரட்சகி வாவா வசிவசி சிவா-இந்தமந்திரத்தை சொல்லி ஞாயற்றுக் கிழமை காலையில் நாயுருவிக்குக் காப்புகட்டிவேரை பிடுங்கிக்கொண்டுவந்து மேற்கண்டசக்கரத்தை வெள்ளிதகட்டில் யெழுதி வேரை அதில்வைத்து சுருட்டி தூபதீபநைவேத்திய முதலானதுங்கொடுத்து நூத்தி எட்டு உருகொடுத்து பின்பு வாணிபம்முதலாகிய வெ

ந்தகாரியங்களுக்கும் வைத்துப்பூஜை செய்துக் கொண்டுவர பலிதம விருத்தியாகும்.

நாயுரிவிக்குக் காப்பு கட்டும்போது மேற்கூறிய மூலமந்திரத்தை நூத்திஎட்டு தரம் சொல்லவேண்டு வேரைபிடுங்குபோதும் நூத்திஎட்டுதரம் சொல்ல வேண்டு:-மஞ்சள் நூல்.

## நரசிம்ம சுவாமி பூஜை

## சக்கரம்.




மேற்கண்ட சக்கரத்தை வெள்ளிதகட்டில் எழுதி தூபதீபநைவேத்தியங் கொடுத்துகீழ்சொல்லியமால் ஆயிரத்தெட்டுதரம் சொல்லிமூலமந்திரத்தை நூத்திஎட்டுதரம் சொல்லவேணடும இப்படி யெட்டுநாள் வரையிலும் காலைமாலை உருகொடுத்துவர சித்தியாகு




ம்பின்பு இந்தசக்கரத்தை எழுதிஅதின்மேல்குந்தவைத்து உரு கொடுத்துவர பேயாகும்.

## பூஜைமால்.

ஓப் அதம் தட்டிரசமாபால ரசமா இரண்ணிய சம்மாரா ஈரேழுபதிநாலுலோகங்களையும் யெரித்தநரசிம்மா என்னுடன் யெதிர்த்த சத்திராதிகளை யெரித்திடு யெரித்திடு விடாதே விடாதே உன் சக்கரத்தை விட்டு தடுத்திடு தடுத்திடு நான் சொன்ன படிக்கிலும் அடிக்கி மின்னும் மின்னும் பெயரை அடித்து பிடிக்கிமின்னும் பெயரைபிடித்து நவக்கோட்டபூதபேதபிசாசுகளையும் பிடித்து பட்சணம் பண்ணிடுவாய் நரசிம்மா என். அரிக்கைக்தகு தப்பினல் பிரகலாதனைகழுத்தையருத்து ரத்தத்தை குடித்ததோஷத்தில் பூடுவாய் நரசிம்மா சீக்கிரம் சீககிரம் உஜாடு உஜாடுயேரியேரி ஆவேசு ஆவேசு ஊர்பட்டு ஆம்பட்டு சுவாகா-மூலமநதிரம் ஐயும்-கிலியும் ஆய்பட்டு சுவா.

## அக்கினி மாடன் பூஜை சக்கரம்.



மேற்கண்ட சக்கரத்தை செப்புத்தகட்டில் எழுதிதூபதீபனைவேத்தியங்கொடுத்து கீழ்சொல்லிய மால்மூலமந்திரம்அவைகளை ஜெபிக்கசித்தியாகும் ஆனல்ஒருமாதம்வரையிலும் ஜெபிக்கவேண்டும் பின்புபேய்ப்பிடித்துவாய் திரக்காதிருப்பவர்களை இந்த சக்கிரம் போட்டு அதன்மேல் குந்தவைத்து மேல்படி மந்திரம் மால் நூத்தியெட்டுதரம் சொல்லவாய்திரக்கும்.


## பூஜைமால்.

ஓம் கல்லு கல்லு என் உடம்பு கருமலைகரும்மலை என் உடமபு உருக்கு உருக்கு என் உடமபு உருக்காணிஉருக்சாணி என் உடம்பு அஞ்செழுத்.தும் பஞ்சாட்சரமும நாநமனென் ஓம்மையிடுங்குரளி ஒப்பேச்சி சாமொண்டி அக்கினிமாடாசர்வதேவதைகளும் என் முன்னே நிற்க சுவாகாமால்சொலலவேண்டியது ஆயிரத்தெட்டு.

## மூலமந்திரம்.

ஓம் சடாயா சடாயா நமசிவாயா பூரணசடாயநா. சுவாகா-உருவு-நூத்தியெட்டு.

## முச்சந்திதோஷ நிவர்த்தி.




## செய்யும் விதி.

ஞாயிற்றுக்கிழமையில் பச்சரிசிமாவில் சலம் விட்டு பிசைந்து ஆண் குழந்தை யாகில் பெண்பாவைச்



செய்து பெண்குழந்தையாகில் ஆண்பாவைச் செய்து காதோலை கருமணி யுடன் மஞ்சள் வஸ்திரம் மேலே சாற்றி-எருக்கம்பூசூடி தாயாரை குழந்தையை மடியில்வைத்துக்கொண்டு கிழக்குமுகமாகக் குந்தச்சொல்லி.புதுசட்டியில் வைத்திருக்கும் பாவை மூன்றுதரஞ் சுற்றி ஏற்றி யிறக்கி-பிறகு ஒன்பது எலுமிச்சம் பழத்தை அருத்துசுத்தி சட்டியிற்போட்டு எடுத்துக்கொண்டுபோய் பிடாரிகோயிலுக்குப்பின்னால வைக்கவேண்டும், பிறகு மேற்கண்டசக்கரத்தை காரீயத்தகட்டிலெழுதி பூசையில்வைத்து ஓம்-ஸ்ரீம்-ஹ்ரீம்-கிலீம்-ஐயும் கிலியும்-சவ்வும்-சுவாகா என்று ௱அ உருவு ஜெபித்து தூபதீப நைவேத்தியங் கொடுத்து குலிசங்கட்ட முச்சந்திதோஷம் முதலானதும் நிவர்த்தியாகும்.

## அஷ்டதிக்கு பந்தன பூஜையெந்த்ரம்.




ஓம்-படு-படு-பட்சி பரமகண்டா பாறுபாறு! சகல பில்லியும் சகல சூனியத்திற்கும் நாயகனாகிய பூதகிக்கிலியா புமேகை கிங்கிலியா வீரகிங்கிலியாவினைதகிங்கிலியா இசைக்கிபை நெஞ்சைப்பிளந்து சாலத்திலர்

தமிடு அனுமான் வீரபத்திரன் சப்பாணி சாமுண்டி யுங்கட்டு ஐயன் புடாரியுங்கட்டு அஷ்டதிக்குபாலகர் வெட்டையுங் கட்டு அதன்கீழ் அடங்கிய ஆடுப்பேய் பாடுமபேய் வண்ணாரப் பேயல்லாம் என் முகங்காண சகலபூதபேத பிசாசுகளெல்லாம் சொப்புக்குடத்தில் அடைத்து பரமதாம் மூன்றும் கல்லெடுப்பாககி அக்கினிபகவானை ஏவியெரித்து அக்கினி கடலிலே அலசி அலசிபோடு ஈ வுபிதக்சம் பாராதே ரணக்கிங்கிலியா ராஜகிங்கிலியா ஓம் பட்டு ஆம் பட்டு ஐயும் கிலியும்பட்டு ஓங்காளி ஓம்பிடாரி ஓம் நமசிவாயா மேற்கண்ட சக்கரத்தைப் போட்டுக் குந்திக்கொண்டு இந்த மாலை கூஅ செபிக்கபந்தனமாகும்.

## வேறுவீரபத்திரசுவாமி பூஜை.




## பூஜை விதி.

முன்போல் ஓா அறையை சுத்தப்படுத்தி மேற்கண்ட சக்கரத்தை பஞ்சலோகத்தகட்டில் எழுதி பூ




ஜையில்வைத்து பசுஞ்சாணத்தினால் பிள்ளையார் பிடித்துவைத்து அறுகம் புற்சூட்டி சக்கரைபழம் வடை பயர். இளநீர் அவல கடலை தாம்பூலம் முதலானதும் வைத்து தூபதீபங் கொடுத்து தேங்காய் உடைத்து பிறகு சாப்பிராணிவத்தியை கொளுத்தி கையிற் பிடித்துக்கொண்டு சொல்லும்.

## மூலமந்திரம்.

ஓம்-ஸ்ரீம்-கிறீம்-ஓம்வீரா-ஹாம்வீரா-உத்தண்டவீரா-ஓம்-வீரபத்திர சுவாமி சுவாக - என்று லட்சம் உரு ஜெபிக்க சித்தியாகும்-குழந்தைகள்-பெரியவர்கள் பயப்படில் - வேப்பலை கொண்டு மந்திரிக்க பயந்தெளியும காரியத்தகட்டில் குலிசமெழுதிக்கட்ட பேய் பிசாசுகள் நாடாது சகலவிதமான கட்டிகளுக்கும் வேப்பிலையால் மந்திரிக்க கட்டியுடையும் பாதை நீங்கும் விபூதிபிடித்துக்கொடுக்க வியாதிநீங்கும் ஆனல் பூஜை செய்ய ஆரம்பிக் கையில் நேம நிஷ்டையோடு யிருக்கவேண்டும்.

## மயான ருத்திரன் பூஜை சக்கரம்.




மேற்கண்ட சக்கரத்தை வெள்ளித்தகட்டில்யெழுதி தூபதீபநைவேத்தியங் கொடுத்து காலைமாலை எட்டுநாளும் கீழ்சொல்லிய மூலமந்திரத்தை ஜெபித்துகொண்டுவர சித்தியாகும் பின்பு இந்த சக்கரத்தைக் குளிசம் யெழுதி கட்டிகழிக்கயேவல் தோஷநீங்கும்.

மூலமந்திர மால்.

ஓம்-ஆம்-ஊம்-நமசிவாயா மசானருத்திர தேவதா மங்கிலியாசடாயா சாமொண்டிச்சடாயா சர்வதேவதை சடாயா கிங்கிலியா ருத்திரபஞ்சாட்சராமசாண சாமுண்டி சடாயா சர்வயேவல்பில்லி சூனியம் சர்வவஞ்சனை தூமான துருஷன்பேய் குட்டிச்சாத்தான்குரளி யெச்சணி சடாயா சடாயா மசானருத்திரசடாயா சுவாகா இந்தபடி உருவு நூத்தியெட்டு கொடுக்கவேண்டும்.

ஏவல்திருப்பலாலை பூஜையெந்திரம்






மேற்கண்ட சக்கரத்தைச்செப்புத்தகட்டில் எழுதிதூபதீபநைவேத்தியங் கொடுத்து கீழ்சொல்லிய மாலமூல மந்திரத்தை ஆயிரத்தெட்டுதரம செபிக்க சித்தியாகுமபின்புச்சக்கரத்தை குளிசமெழுதிகட்டிகழுப்புக்கழிக்க யேவல்முதலான தும விலகிப்போகும்.


மால்-மூலமந்திரம்.

ஓம்-சங்கராயநமாசண்முகாயநமா தேவிதேவி பஞ்சாட்சரரூபி வாலைரூபி பீஜாக்ஷரி சகலயேவல்பில்லி சூனியங்கள் மார்மார் நசி-மசி சுவாகா.

மூலமந்திரம்.

ஓம்-நமசிவாயா அம்-உம்-நம் சிவாயநமா-உருவு ௲அ-எட்டுநாள் காலைமாலை ஜெபிக்கவேண்டும்.

உச்சாடன பூஜை சக்கரம்.




மேற்கண்ட சக்கரத்தை ஜானகியில் விபூதியிட்டு அதில் எழுதி சாம்பிராணிவைத்துக்கொளித்துக்கொ


ண்டு கீழ் சொல்லிய மூலமந்திரத்தை நாள்ஒன்றுக்கு நூத்தியெட்டுதரம் சொல்லிஜெபிக்கவேண்டு அப்படி பதினைந்துநாள் ஜெபித்துவரசித்தியாகும்.

துலுக்குபாஷை.

மூலமந்திரம்.

ஆவுஜீ சந்தயா சர்ஜலிய அமாரேக்குதாக்கி பேட்டா அமாரேதகஸ் மாப்க்கரோ உஸ்தர்பந்தா அகஷ்டோ மசானேபந்து சர்க்கோனுபந்துஆத்தோசோசயித்தானுக்குபந்து சம்சுசேமார தல்லார்சேமார்லகி லில்லல்லா பீர்சந்தியாதேவு தமாரே பாவுநம் கரை அம்நா மாப்கரோ.

## மதுரைவீரசுவாமி பூஜை யெந்திரம்.




மேற்கண்ட சக்கரத்தை வெள்ளித் தகட்டில் எழுதி தூபதீப நைவேத்தியங்கொடுத்து கீழ்சொல்லிய



மூல மந்திரத்தை நாள் ஒன்றுக்கு ௱௮-உருவு காலை மாலை முப்பதுநாள் ஜெபித்துக்கொண்டுவர சித்திபாகும் பின்பு சகலதோஷமும் பேய்பிசாசுகள் விலகமந்திரிக்க நீங்கும்.


மால் மூலமந்திரம்.

அரி-ஓம்- ஜெபவீரா அநுகூலா ஆதிபராக்கிரம பாலா வசிய வசிய உனக்கின்பமானபோது எனக்கின்பமாகு சிவாகா.

மூலமந்திரம்.

ஓம்-ஆம்-ஊம் நமசிவாயா மதுரை வீர ராஜா வாவா சுவாகா.

## சகலகழிப்பு கழிக்ககாளிபூஜை யெந்திரம்.




எவ்வித தோஷங்களால் நேர்ந்தகழிப்புக்கழிக்க மேற்கண்ட சக்கரத்தை குலிசமாக யெழுதி தூபதீப

நைவேத்தியங் கொடுத்து கீழ்சொல்லிய மூலமந்திரத்தை ௱௮-சபித்துக்கட்ட தோஷம நீங்கும் காரியத்த கட்டில் எழுதவேண்டும்.

மூலமந்திரம்.

ஓம் பிரணவ சக்கரத்தின் உள்பிறந்த காளிகா தேவி சம்மார ரூபி சடாதரி சங்கரி வாவா அடி பிடி மடி சுவாகா உருவு ௱௮.

சத்திபூசைவஜிகர யெந்திரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஐயும் | கிலியும் | சவ்வும் | றீம் | ரம் |
| ரீம் | ஸ்ரீ | சவ்வும் | கிலியும் | ஐயும் |
| சவ்வும் | கிலியும் | ஐயும் | ஸ்ரீம் | றீம் |
| ஸ்ரீம் | றீம் | கிலியும் | ஐயும் | சவ்வும் |


ஓம்-சத்தி ஒங்கார மானசத்தி ஆங்கார மானவளே சள்ளும் கரியும் கனக்கவே யான் தருவேன் யெந்தமுகம்போனாலும் இந்தமுகம் வந்துவிடும-பந்து பந்



து பராக்கிரம முள்ள வீரபரமன் குமாரத்தி பேச்சி இளச்சி பிணந்தின்னும் ஆண்டிச்சி ஆடாத பேயெலலாம் ஆட்டி வைக்கும் வல்லபையே அறையும் அறையும் ஓடாத பேயெல்லாம் ஓட்டி வைக்கும் வல்லபையே அறையும் பிடிசூலம் ஒரு கையில் இரத்தம் ஒருகையில் வெட்டருவாள ஒருகையில் சக்கரம ஒருகையில் தேவிபஞ்சாட்சரி வருகவருக மகாசத்திவருக பாதம் நமஸ்த்து ஐயும கிலியும் சவ்வும் ஸ்ரீயும் றீயும் சுவாகா,

நாள் ஒன்றுக்கு இந்தமால்-௱௮-செபித்துக்கொண்டு வரசித்தியாகும் ஆனால் ஒருவாரம் செபிக்க வேண்டும் சித்தியான பின் சகலதோஷ முதலான வைகளுக்கும் குளிசமெழிதிகட்டலாம.

வேறு சுப்பிரமண்ணியர் பூஜை




பூஜை செய்யுமவிதி.

ஓர் அறையைப் பசுஞ்சாணத்தினால் மெழுகி சுத்தப்படுத்தி - ஆதிவாரம - அல்லது குருவாரப் இந்த

நாட்களில் மேற்கண்ட சக்கரத்தை தாம்பர தகட்டில் எழுதி பூஜையில் வைத்து மஞ்சளினால் விக்கினேஸ்வரரை பிடித்து வைத்து சக்கரை - பழம் அவல் கடலை தாம்பூலம் முதலானதும் வைத்து தேங்கா யுடைத்து தூபதீபம் கொடுத்து பிறகு சாம்பிராணி வத்திலையக் கொளித்தி கையில் பிடித்துக் கொண்டு சொல்லும் மந்திரம் - ஓம் - சரவணபவ-ஐயும்-கிலியும் - சவ்வும் சுவாக - என்று லட்சம் உருசெபித்து மேற்படி சக்கரத்தை தங்கத் தகட்டில் குலிச மெழுதிக் கட்ட சகல தோஷமும், சகலபிணியும சகல பயங்கரமும் சகலவிரோதமும் பேய் பிசாசுகளா லுண்டாகும் சகல பர்தையும் வைப்பு யேவல் முதலான தாலுண்டாகும் துன்பமும் ஸ்திரீகளைத் தொடரும் முனிகள் முதலானதும் அபயமிட்டு அலறி ஓடும் ஆனல் - பூஜை செய்பவர் - நேமநிஷ்டையோடு ஒருவேளை அன்னம்புசிக்க வேண்டும் அன்றியும் - சூரியகிரகணம் - சந்திர கிரகணம் இவைகளில் பூஜை ஆரம்பிக்கில் விசேஷம் சீக்கிரத்தில் கைவல்லியமாகும்.

அந்திதோஷ நிவர்த்தி




செய்யும் விதி,

ஞாயிறு செவ்வாய் வியாழம் இந்த வாரங்களில் குப்பமேனி செடிக்கு மஞ்சள் நூல் காப்புகட்டி சிரு



குடுவையில் பொங்கலிட்டு தூப தீபங்காட்டி மருவாரம் சென்று வேரைப்பிடுங்கிக் கொண்டுவந்து, மேற்கண்ட சக்கரத்தை செப்புத் தகட்டி லெழுதி வேரை அதினுள் வைத்து சுருட்டி பூசையில் வைத்து - ஓம் ஐயும்-கிலியும்-சவ்வும்-சுவாக-அந்தி தோஷமும் சகல தோஷமும் பாலனைவிட்டுப் பறந்தோட வேணுமென்று-௲-உரு ஜெபித்து குலிசத்தை குழந்தைக்குக் கட்ட தோஷம்நிவர்த்தியாகும் ஆனல குலிசம்கட்டுவதற்குமுந்தி சாந்திகழிக்கவேண்டும் இதற்கூறிய மந்திரத்தை ௱அ தரம் சொல்லி வேப்பிலையாலாவது, வஸ்திரத்தினலாவது மந்திரிக்கவேண்டும் அப்படி காலை உச்சி மாலை மூன்று வேளையும மந்திரிக்க வேண்டும்.

உச்சிதோஷ நிவர்த்தி.





செய்யும் விதி.

ஞாயிற்றுக் கிழமையில் ஓரிலைதாமரை செடிக்கு மஞ்சள் நூல காப்பு கட்டி சிறு குடுவையில் பொங்கலிட்டு பலிகொடுத்து, பெல்லம், பழம், அவல் கடலை தாம்பூலம் முதலானதும் வைத்து தேங்காயுடைத்து தூபதீபங்காட்டி வேரை அறுமல் பிடுங்கிக்கொண்டு

வந்து மேற்படிசக்கரத்தை தாம்பரத் தகட்டிலெழுதி வேரை அதனுள்வைத்து சுருட்டி பூஜையில வைத்து மந்திரம்-ஓம்-ருத்திர தேவி உச்சிதோஷம் நிவர்த்தி ஐயும் - கிலியும்-சவ்வும்-என்று-௱௮-உருவு ஜெபித்து தூபதீபங்காட்டி குலிசத்தை எடுத்து குழந்தைகளுக் குக்கட்ட உச்சிதோஷம் முதலானதும் ஓடும்-ஆனால குழந்தைக்கு முன்னதாக சாந்திசழித்து பிறகுகுலிச த்தை கட்டவேண்டியது.

## பயந்தெளிய விபூதிபிடிக்க.





## செய்யும் விதி.

பூர்வபட்சம் ஆதிவாரததிற்மேற்கண்டசக்கரத்தைப ஞ்சலோகத்தகட்டில்எழுதிபூஜையில்வைத்துபுஷ்பம்சா ற்றிசக்கரைபழமஅவலகடலைதாமபூலம்முதலானதும் வைத்து தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து சொ ல்லும் மந்திரம்-ஓம-சரகணபவ சத்தியின் புத்திராஆ றுமுகமும் ஆறிருவிழியும் சீருடன் நோக்கி சேயன்மு ன்வருவாய் சகலதோஷங்களால் சார்ந்திடுமே பயங்கள் அபபபிட்டோட அடிமைசள்பிழைக்க ஐயும்-கிலியும்



சவ்வும் ஓம்சரகணபவா என்று நாளொன்றுக்கு ௱௮ உரு கொடுத்து நாற்பதுநாள் நேமநிஷ்டையோடு வருக சித்தியாகும், சித்தியான வுடன் பல விததோஷங்களால் பயந்து பிணிபட்டவர்களும் விபூ தி மந்திரித்துக் கொடுக்க சகலபிணியும் சகலபயமும் சகலதோஷமும் நிவர்த்தியாகும் இந்தசக்கரத்தை கு லிசமெழுதியுங்கட்டலாம்.

## பிசாசுகளை கட்டுக்கட்ட.





## செய்யும் விதி.

மேற்கண்ட சக்கரத்தை எட்டிமரப் பலகையில எழுதி பூசையில்வைத்து பெல்லம், பழம்; அவல் கட லை தாம்பூலம் முதலானதும் படைத்து தேங்காய் உ டைத்துவைத்து தூபதீப நெய்வேத்தியம் செய்து இ ந்தப்படி ஒன்பது நாளும் தவறாமல் ஜெபித்துக கொ ண்டு வரும்போது சொல்லும் மந்திரம் அரி அரி சிவ சிவா ஐயும் கிலியும் சவ்வும் சர்வ பிசாசுகளும் என் னைக் கண்டால் ஏக்கம் பிடித்தோட சிவா என்று நா ளொன்றுக்கு ௱௮ உருஜெபிக்க சித்தியாகும் பிறகு பேய்பிசாசுவாசம் செய்யும்படியான இடங்களில் இ

ந்தசக்கரத்தை எழுதி ஸ்தாபிதம் அன்றே அவ்விடம் செய்ய அன்றே அவ்விடம் விட்டு அலறிஓடும் சக்கரத்தை குலிசமெழுதிகட்ட எக்காலமும் பிசாசு அணுகாது.

## பேய்ப்பிசாசுகளை பந்தனஞ்செய்ய





## செய்யும் விதி.

சூரியகிராணத்தில் மேற்கண்டசக்கரத்தைவெள்ளீயத் தகட்டில் எழுதி பூஜையில் வைத்து சர்க்கரை பழம் அவல்கடலை தாம்பூலம் கள்ளு சாராயம் இரச்சி முதலானதும்வைத்து ஜெபிக்கும்மந்திரம்-ஓம் மசி மசி-நசி-நசி-ஸ்ரீம்-ஐயும்-கிலியும்-சவ்வும்-சிவா என்று மூன்று நாளையும காலை மாலை இருவேளையும் வேளை ஒன்றுக்கு தவறாமல். ௱௮-உ-ருஜெபித்து சித்தியானவுடன் மேற்படி சக்கரத்தை எட்டமரப்பலகையில் எழுதி ஸ்தாபிதம் செய்யப்பேய் பந்தனமாகும்.



ஆனால் ஜெபம் செய்ய ஆரம்பிப் பதற்கு முந்தி பெருத்த பூஜைபோட்டு பிறகு ஜெபம் செய்ய ஆரம்பிக்கவேண்டும், இந்தசக்கரத்தை குலிசமெழிதிக் கட்ட பேய்ப்பிசாசுகள அணுகாது.

## பேய்ப்பிசாசுகள் விலக.





## பூஜைசெய்யும் விதி.

மங்களவாரமும் சூரியக்கிராணமும், ஆயிலிய நட்சத்திரமும் கூடிய தினத்தில் மேற்படி சக்கரத்தை செப்புத்தகட்டில் எழுதி பூஜையில்வைத்து சர்க்கரை பழம் அவல் கடலை தாம்பூலம் முதலானதும் படைத்து சந்தனம் தெளித்து புஷ்பங்கள் சாற்றி தேங்காயுடைத்துவைத்து தூபதீபநெய்வேத்தியம் செய்துஜெபிக்கும் மந்திரம் ஓம் சரகணபவா, சர்வபேய் பிசாசுகளும் என்னைக்கண்டால் இடிவிழுந்தோட ஜாடு ஜாடு ஐயும் கிலியும் சவ்வும சுவாக என்று ஒன்பது நாளும் தவறாமல் நாளொன்றுக்கு இருவேளையும் ௱௮ உரு

ஜெபிக்க சித்தியாகும் பிறகு இந்த சக்கரத்தை பேய் பிடித்துழல் வோர்களுக்குக் குலிச மெழுதிக் கட்ட வெகுநாளாகப் பிடித்திருந்தப் பேய்கள் யாவும் அபயம் இட்டு அலறிகொண்டோடும் விபூதியும் பிடிககலாம்.

## காட்டேறி விலக.





## பூஜைசெய்யும் விதி.

ஆதிவாரமும் சந்திரகிரணமும் கேட்டைநட்சத்திரமும் ஒன்றுகூடிய தினததிறகுல் மேற்கண்ட சக்கரத்தை காரியத் தகட்டில் எழுதி பூஜையில் வைத்து புஷ்பம் சாற்றி சந்தனம் தெளித்து பெல்லம் பழம் அவல்கடலை தாம்பூலம் முதலானதும் படைத்து தேங்காய் உடைத்து வைத்து தூபதீப நெய்வேத்தியஞ் செய்து சூடங் கொளித்தி சொல்லும் மந்திரம். ஓம் ஓம்-ஸ்ரீம்-ஸ்ரீம்-றீம்-றீம் அரி அரி முரிமுரி ஜாடுஜாடு ஐயும்-கிலியும்-சவ்வும் சிவா சர்வகாட்டேறியும் பரங்



தோட சுவாகா என்று-௲அ-உருஜெபிக்க சித்தியாகும் இந்த சக்கரத்தைக் குலிசம் எழுதிகட்ட வெகுநாளாய் தொடர்ந்திருக்கும் சர்வ காட்டேறிகளும் அலறிவோடும்.





## ஓடாதமுனிகள் ஓட.

ஆதிவாரமும் அமாவாசையும் விருட்சி கலக்கினமும் கூடியதினத்தில் மேற்கண்ட சக்கரத்தை எட்டிமரப் பலகையில் எழுதி அதைப் பன்னீரால் அலம்பி கெந்தபுஷ்பம் முதலானதும் சாற்றி பூஜையில்வைத்து சர்க்கரை பழம் அவல் கடலை தாம்பூலம் பசும்பால் முதலானதுடன் தேங்காய் உடைத்து வைத்து தூபதீபநெய்வேத்தியம் செய்து கற்பூரங் கொளித்தி வைத்து சொல்லும் மந்திரம் அரி அரி சிவசிவா ஓம் றீம்-ஸ்ரீம்-ஐயும்-கிலியும்-சவ்வும் நசிநசி மசிமசி சுவா என்று மூன்று நாளும் இருவேளை ௲அ உரு ஜெபித்துவர சித்தியாகும் பிறகு இந்த சக்கரத்தை விபூதிஉ

ண்டையால் பூமியில்எழுதிஅதின்மேல் குந்தவைத்து மேற்படி மந்திரத்தைஜெபிக்கஆடாதமுனியும் ஆடும் வாய்திரக்கும் குலிச மெழுதி கட்ட ஓடாத முனியும் அபயமிட்டோடும்.

## ஆடாதபேய்கள் ஆட.





செய்யும் விதி.

மேற்கண்ட சக்கரத்தை காரீயத்தகட்டில்எழுதி பூசையில்வைத்து சர்க்கரைபழம் தேங்காய் அவல் கடலை தாம்பூலம் முதலானதும் வைத்து தீபமேற்றி வைத்து கற்பூரங் கொளித்திவைத்து சொல்லுமந்திரம்-ஓம்-பகவதி ஆ்பகவதி ஆதிபகவதி ஆடாதபேய்களை ஆட்டும் பகவதி ஐயும்-கிலியும்-சவ்வும்-சுவாகா என்று மூன்று நாளும் தவருமல் காலைமாலை இருவேளையும்வேளை ஒன்றுக்கு ௲அ உருஜெபிக்க சித்தியாகும் பிறகு இந்த சக்கரத்தை தரையில்விபூதிகட்டியா



ல் எழுதி அதின்மேல பேய்பிடித்தவர்களை குந்தவைத்துமேற்படி மூலமந்திரத்தை ஜெபிக்க ஆடாத பேய் ஆடிவாய் திரக்கும் பின்பு செய்ய வேண்டியதை எல்லாம செய்து இந்த சககரத்தை குலிசமெழுதி கட்ட பேய் அகலும்.

## வாய்திராத முனிகள் வாய்திரக்க.




செய்யும் விதி

சூரியகிரணத்தில் மேற்கண்ட சக்கரத்தை செப்புத் தகட்டில் எழுதி குளக்கரையிற் சென்று கிழக்கு முகமாகக் குந்தி தரையை சுத்தப்படுத்தி சக்கரத்தை எதிரில் வைத்து சர்க்கரைபழம் அவல்கடலை தாமபூலம் முதலானதும் வைத்து தேங்காய் உடைத்து கற்பூரங்கொளித்திவைத்து பிறகு சாமபிராணிவத்தியை கொளித்திக்கையிற் பிடித்துக்கொண்டு ஜெபிக்கும்மூலமந்திரம் ஓம்-ரீம--ஸ்ரீம-நீலகண்டா நீ என் துணை

யாக விருந்து ஜாடு ஜாடு வாய்திராத முனிகளை வாய் திரந்து பேசச் செய்வாய் ஓம் ஐயும் கிலியும் சவ்வும் சுவாகா என்று லட்சம் உருஜெபிக்க சித்தியாகும் பிறகு இந்த சக்கரத்தை விபூதிகட்டியால் பூமியிலஎழுதி அதின்மேல் குந்தவைத்து மூலமந்திரததை ஆயிரத்தெட்டு ஜெபிக்க உடனே வாய்திரந்து வரலாரைச் சொல்லும் உடனே முடியருந்தசெய்யவேண்டியதை எல்லாம் செய்து பின்பு இந்த சக்கரத்தை செப்புத்தகட்டில் யெழுதி பூஜையில்வைத்து ஜெபித்து குலிசம் கட்ட சாவளவும் முனிகள்வந்தணுகாது.

## கழுப்புக் கழிக்க.







## செய்யும் விதி.


பேய்பிசாசுகள் முதலானதாலும் இன்னம்எதேனும் துன்பஙகள்பட்டு மேலிந்தபேர்சளிக்கு கழிப்புக்கழிக்கவேண்டுமாகில். பச்சரிசிமாவால் பாவு செய்து புதுசட்டியிலவைத்து கருமுள்ளி செம்முள்ளிக்குத்தி பஞ்சவர்ன நூலும். சிகப்பு வஸ்திரமுப்சாற்றி ஒன்பதுவகை புஷ்பப்சூடி. பழம் அவல்சுடலை ரொட்டி வெஸ்து சுருட்டு புண்ணுக்குக் கீரைவைத்து கதம்பப்பொடிதூலி தூபதீபங்கொடுத்துகருப்புசாவலபெலிபிட்டு சொலலும் மந்திரம் ஒம்-ஐயும்-கிலியும்-சவ்வும் சர்வதோஷங்களுங் நிவர்த்தி என்று நாத்திவெட்டு உருஜெபித்து நோயாளியை கிழக்குமுகமாகக்குந்தவைத்து பாவைஎடுத்து ஒன்பதுதடவை எற்றியிறககி குளக்கரையில கொண்டுபோய் வைத்து பிறகு மேர்கண்டிருக்கும் சக்காத்தை காரீயததகட்டில் எழுதி பூஜையில்வைத்து குலிசம்கட்ட சகலதோஷமும் நிவர்ததியாகும் ஆனல் ஆணுகில் பெண்பாவை செய்யவேணடு பெண்ணுகில் ஆணபாவைசெய்யவேண்டும்.

## வாழ்முனியை வாய்திரக்கச்செய்ய.



## செய்யும் விதி.

ஆதிவாரமும சூரியகிராணமும் கூடியதினத்தில் மேற்கண்ட சக்கரத்தை பஞ்சலோகத்தகட்டில் யெழுதி பூஜையில்வைத்து புஷ்பம் சாற்றி சந்தணம் தெளித்து சர்க்கரைபழம அவல்கடலைதாம்பூலம் முதலானதும் படைத்து தேங்காய் உடைத்து தூபதீப னைவேதனஞ் செய்து பிறகு சொலனும் மந்திரமஅரிஅரி ஓம் பிரணவா வாழ்முனியை வாய்திரக்கக் செய்வாய் ஓம் பிராணவா ஐயும் கிலியும் சவ்வும் சிவா என்று ஒன்பதுநாளுமு தவராமல் காலைமாலை இருவேளையும் வேளை ஒன்றுக்கு ஆயிரத்தெட்டே உருஜெபிக்கசித்தியாகும் சித்தியானபின்பு வாழ்முனியை வாய்திரக்கச் செய்யவேண்டில் மேற்படிசக்கரத்தை விபூதிக் கட்டியால் பூமியின்மேல்யெழுதி அந்த சக்கரத்தில்முனிபிடித்தவர்களை குந்தவைத்து மூலமந்திரத்தை ஜெபிக்க ஆடி வாய்திரந்து வரலாறுகூறும் உடனே முடிஅறுத்து செய்யவேண்டியதுகளை செய்யவேண்டும் பிறகு இந்த சக்கரத்தையே குலிசம் யெழுதி பூஜையில் வைத்துகட்ட எக்காலத்திலும் வாழ்முனி வந்தணுகாது எந்த முனிக்கும் இந்த குலிசம்கட்டலாம்.





லாடமுனியை விலகச்செய்ய.



## செய்யும் விதி.

மங்களவாரமும் அமாவாசையும் கேட்டை நட்சத்திரமும் கூடியதினத்தில் மேற்கண்ட சக்கரத்தை காரீயத்தகட்டில் எழுதி பூசையில் வைத்து சந்தணம் தெளித்து புஷ்பம் சாற்றி தீபம் எற்றிவைத்து சர்க்கரை பழம் அவல் கடலை தாம்பூலம் முதலானதும் படைத்து தேங்கா யுடைத்து வைத்து கற்பூற ஆருதணைசெய்து சாம்பிராணி வைத்திகொளித்திவைத்துச் சொல்லும் மந்திரம் ஓம் அரிவீரா ஆங்காரவீர உக்கிவீரா உத்தண்டவீரா ஐயும் கிலியும் சவ்வும் சிவா என்று இருபத்தோர்நாளுமு தவராமல் காலைமாலை இருவேளையும வேளைஒன்றுக்கு ஆயிரத்தெட்டு உருஜெபிக்க சித்தியாகும் சித்தியானபிறகுலாடமுனியை விலகச் செய்யவேண்டில மேற்படி சக்கரத்தை குலிசம் எழுதிக்கட்ட லாடமுனிமுதலான சகல முனிகளும் அலரிக்கொண்டோடும எக்காலமும் வந்தணுகாது.


## வைப்புகளைத் திருப்ப.



## செய்யும் விதி.

மேற்கண்ட சக்கரத்தை எட்டிமரப் பலகையில் எழுதி பூஜையில் வைத்து நல்லெண்ணெயில் தீபமேற்றி சக்கரத்திற்கு குங்கமிட்டு சந்தணம்தெளித்துபுஷ்பம்சூட்டி சர்க்கரை பழம் அவல்கடலை ரொட்டி வஸ்து தாம்பூலம் முதலானதும் படைத்து தேங்காய் உடைத்து வைத்து சாம்பிராணி வைத்தி கற்பூறப்கொளித்திவைத்து சொல்லும மூலமந்திரம் - ஓம்-சிங்-வங்ரங் எதிரிகள் பேவும் வைப்புயேவல் முதலானதுமபஞ்சாய் பறந்தோடவும் ஐயும் கிலியும் சவ்வும் சிவா என்று ஒன்பதுநாளும் தவராமல் காலைமாலை இருவேளையும் வேளையொன்றுக்கு ஆயிரத்தெட்டு உருஜெபிக்க கைவல்லியமாகும், பின்பு வைப்பினால் வாதைப்படுவோர்களுக்கு முந்திநவக்கிரகசாந்திசெய்வித்துபின் புகழுப்புக்கழித்து மேற்படி சக்கரத்தை காரியத்தகட்டில் எழுதில் பூஜையில்வைத்து முன்போல்சகலமும் படைத்து மூல மந்திரத்தை ௱அ ஜெபித்து தகட்டை யெடுத்து சுருட்டி அதன்மேல் பஞ்சவர்னநூல் சுற்றி வெள்ளிதாயித்தையிலேனும் பொன்தாயித்தையிலேனும் அடக்கம செய்து கட்டவேண்டும் அப்படிசெய்யவைப்பு திருப்பி தேகசவுக்கிய முண்டாகும்.







## செய்யும் விதி.

மேற்கண்ட சக்கரத்தை சூரியகிராணத்தில் செப்புத் தகட்டில் எழுதி பூஜையில்வைத்து சர்க்கரை பழம் அவல் கடலை தாம்பூலம் முதலானதும் படைத்து தேங்காய் உடைத்துவைத்து தூபதீப நைவேத்தியஞ்செய்து சொல்லும் மூலமந்திரம் ஓம் சரஹணபவா ஐயும் கிலியும் சவ்வும் ஓம் சரஹணபவா சடுதியில்வாவா நோக்கமுனியை தாக்கு தாக்கு தணலேறி தணலேறி ஓட்டு ஓட்டு ஓம் சுவாகா என்று ௲அ உரு ஜெபித்து அந்ததகட்டையெடுத்து சுருட்டி வெள்ளிதாயித்தைசெய்து அதிலதை அடக்கம்செய்து கட்டிக்கொள்ள லாடமுனி ஓடிப்போகும் இன்னம் இந்தசக்கரத்தையே பேய் பிசாசு பூதம் முதலானதுகளுமெழுதிக்கட்ட சூரியனைக்கண்டப் பனிபோல் பஞ்சாய்ப்பறந்தோடிவிடும்.

## ஜடாமுனியை ஓட்ட.





### செய்யும் விதி.

சடாமுனியை ஓட்டவேண்டில். முனி பிடித்தவர்களை அழைத்துவந்து மேற்கண்ட சக்கரத்தைவிபூதி கட்டியால். பூமியின்மேல யெழுதி அவர்களை கிழக்குமுகமாக குந்தவைத்து-ஓம்-அப-உம்-றிங்-வங்-கங். ஓம்சாமளாதேவி சடுதியில்வாவா சடாமுனியை ஜாடு ஜாடு எறிஎறி முறிமுறி உஜாடு உஜாடு ஐயும்-கிலியும் சவ்வும்-சுவாஎன்று ௱௮-உரு ஜெபிக்க சடாமுனி தலைசுற்றி ஆடிவாய்திறந்து வரலாறுகூறும் உடனே முடியை அறுத்து செய்யவேண்டியதுகளை செய்து



விடவேண்டும் பிறகு மேற்படிசக்கரத்தை காரீயத்தகட்டில் எழுதி-பூஜையிலவைத்து மேற்படி மூலமந்திரத்தை ௱௮-ஜெபித்துதகட்டையெடுத்து சுருட்டிமூன்றுவர்ண நூல்மேலே சுற்றி குளிசம்கட்ட எக்காலத்திலும முடிகள்வந்து நாடாது.


## சன்னியாசி முனியை ஓட்ட.




### செய்யும் விதி.

சன்னியாசிமுனி பிடித்துச சங்கடப்படுவோர்களுக்கு மேற்கண்ட சக்கரத்தை வெள்ளித்தகட்டில் எழுதி பூஜையில்வைத்து சர்க்கரை-பழம்-அவல் கடலை தாம்பூலம் முதலானதும் வைத்து தேங்காய் உடைத்து தூபதீப நைவேதனஞ்செய்து சொல்லும் மந்திரம் ஓம் சரகணபவா ஐயும்-கிலியும்-சவ்வும்-சரகணபவா என்று ஆயிரத்தெட்டு உருஜெபித்து. தகட்டை எடு

த்துச் சுருட்டி மூன்றுவர்ண நூல்சுற்றி குலிசம் கட்ட சன்னியாசிமுனி சங்கடப்பட்டு ஓடும் ஆட்டவேணுமென்றாலும் மேற்படி சக்கரத்தை விபூதிகட்டியால பூமியினமேலெழுதி முனிபிடித்தவர்களை அதின் மேல குந்தவைத்து மேற்படி மூலயந்திரத்தை சொல்ல, ஆடிவாய்திறந்து வறலாறைக்கூறும். உடனே முடிஅருத்துசெய்யும். வேலைகளை செய்துமுடித்துவிடலாம.



ஏவல் வீழ்ச்சக்.


செய்யும் விதி.

எதிரிகள் விடும் எவ்வித ஏவல் முதலான வைகைளுக்கும ஆதிவாரத்தில மேற்படி சக்கரத்தை செப்புத்தகட்டில் எழுதி பூஜையில் வைத்து சர்க்கரைப்பழம அவல் கடலை ரொட்டிகரி வஸ்து தாம்பூலம்முதலான துப்படைத்தும் தேங்காய் வுடைத்து தூபதீப நை



வேதனஞ் செய்து சொல்லும் மூலமந்திரம் ஓம் சரவணபவா சூரரைக்காய்ந்த சுப்பிரமண்ணியா நேராகஎன்முன் நீவாவா எதிரிவிடும் ஏவலைவிலக்கி பாலனைகார்ப்பாய் பண்ணிருவிழியால் ஓம் சரவணபவாஹ்றும்கிலீயும் சவ்வும என்றும் ஆயிரத்தெட்டு உரு ஜெபித்துசாந்திகழித்து இந்த குலிசத்தை கட்ட சகலவிதஏவல்களும் நிவர்த்தியாகும் எதிரியை ஜெபம் செய்யலாம.

## வீரபத்திரசுவாமி பூஜையெந்திரம்.




மேற்கண்ட சக்கரத்தை செப்புத்தகட்டில் எழுதி தூபதீப நைவேத்தியங் கொடுத்து கீழ்சொல்லியமால் மூலமந்திரத்தை நாளொன்றுக்கு ௲ - உருவு செபிததுக் கொண்டுவர சித்தியாகும் ஆனல் ஒருவாரம் காலைமாலை சபிக்கவேண்டும் பின்பு யெவ்வித தோஷங்களுக்கும் குலிசமெழிதிக் கட்டி விபூதி மந்திரித்துக்கொடுக்க சுகமாகும்.

மால் மூலமந்திரம்.

அரி-ஓம்-ஆம-உம- சிவ சிவா சமதரா சண்முகா சடாதர சண்முக ரூபாயா அகோர அகோர ரூபாயா வாவா-ஐயும்-கிலியும - சவ்வும அகோர வீரபத்திராயா நம குரோம் குரோம் சமமாரகோலாகலா வருக வருக வயநம சிவாயா வருக நங்-மங்-சிங்-வங்-யங் சுவாகா உருவு ௲ பூசைசெய்யும் நாள் எட்டும்விரதமிருந்து ஒருவேளை அன்னம் புசிக்கவேண்டும்.

## சுப்பிரமணியர் சக்கரங்கள்.

வசிய சக்கரம்.




மூலமந்திரம்.

ஓம் - றீம் - ஐயும்-கிலியும் ஔவும்-சௌவும்.

சரஹணபவ.

இந்தச் சக்கரத்தைவில்வப் பலகையில் வரைந்து, எழுத்துகளை யடைத்து, கல்ஆசனத்தில் கிழக்குமுகமாக விருந்து பூசித்து, உருத்திராட்சத் தாழ்வடத்தால் ஆதிவாரந்தொடங்கி ௲ - உருவேற்றச் சித்தியாகும்.

ஆக்ருஷண சக்கரம்.



மூலமந்திரம்.


றீம்-ஐயும் - கிலியும்-ஔவும் சௌவும்-ஓம்.

ரஹணபவச.

இந்தச் சக்கரத்தைவெண்ணாவற்பலகையில் வரைந்து, எழுத்துகளை யடைத்து.பட்டு ஆசனத்தில் ஈசானதிசை முகமாக விருந்து பூசித்து, ஸ்படிகத் தாழ்வடத்தால் குருவாரந் தொடங்கி ஆயிரத்தெட்டு உருவேற்றச் சித்தியாகும்.



மோகன சக்கரம்.



மூலமந்திரம்.

ஐயும் - கிலியும் - ஔவும சௌவும்-ஓம்-றீம்.

ஹணபவசர.

இந்தச்சக்கரத்தை அலரிப் பலகையில்வரைந்து எழுத்துகளை யடைத்து புலிஆசனத்தில் வடக்கு முகமாக விருந்து பூசித்து; மிளகுதாழ்வடத்தால் சோமவாரந் தொடங்கி ஆயிரத்தெட்டு உருவேற்றச்சித்தியாகும்.

தபபன சக்கரம்.



மூலமந்திரம்.


கிலியும்-ஔவும-சௌவும்

ஓம்-றீம்-ஐயும்.

ணபவசரஹ

இந்தச்சக்கரத்தை ஆலம்பலகையில் வரைந்து,எழுத்துகளையடைத்து, தர்ப்பாசனத்தில் கிருதி திசை முகமாக விருந்துபூசித்து, தாமரைமணித் தாழ் வடத்தால அங்காரக வாரந் தொடங்கி ௲ உருவேற்றச் சித்தியாகும்.

உச்சாடன சக்கரம்.



மூலமந்திரம்.

ஔவும் - சௌவும் - ஓம் றீம்-ஐயும்-கிலியும்.

பவசரஹண.

இந்தச் சக்கரத்தைப் பலாப் பலகையிலவரைந்து எழுத்துகளையடைத்து, சித்திராசனத்தில்வாயுதிசை முகமாக விருந்து பூசித்து சீநதிலமாலைத் தாழ்வடத்தால் புதவாரந் தொடங்கி ௲ - உருவேற்றச் சித்தியாகும்.

மாரண சக்கரம்.




மூலமந்திரம்.

சௌவும்-ஓம்-றீம்-ஐயும்-கிலியுப்-ஔவும்.

வசரஹணபவ.

இந்தச் சக்கரத்தை அத்திப் பலகையில் வரைந்து, எழுத்துகளையடைத்து, வேங்கை ஆசனத்தில் அக்கினிதிசைமுகமாக விருந்து பூசித்து, நாபிமணித்தாழ்வடத்தால் சனிவாரந் தொடங்கி ஆயிரத்தெட்டு - உருவேற்றச் சித்தியாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச | ர | ஹ | ண | ப | வ |
| ர | ஹ | ண | ப | வ | ச |
| ஹ | ண | ப | வ | ச | ர |
| ண | ப | வ | ச | ர | ஹ |
| ப | வ | ச | ர | ஹ | ண |
| வ | ச | ர | ஹ | ண | ப |

சமுதாயமாறல சக்கரம்.

இந்தச் சக்கரத்தை வெள்ளி அல்லது தங்கரேக்கில்வரைந்து,எழுத்துகளையடைதது,பதுமாசனத்தில கிழக்குமுகமாக விருந்து பூசித்து, உத்திராட்சதாழ்வடத்தால் ௲அ உரு தினம் ஏற்றசர்வகாரியமுஞ்சித்தியாகும்.

முற்றிற்று,